**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு</u>**

**<u>CC No.11/2024</u>**

எதிரி ஆஜர்.

அ.சா.– 1 திரு.பிரவின்ராஜ் த/பெ. சுரேஷ் நாள்–10.10.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

அதசாஆ 1 காசோலை என்னிடம் பூர்த்தி செய்து கொடுத்தாரா என்றால் பூர்த்தி செய்த காசோலை தான் என்னிடம் கொடுக்கப்பட்டது ஆனால் எதிரி தான் அதை பூர்த்தி செய்தாரா என்பது தெரியாது. அதசாஆ 1 காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரி என் முன்னிலையில் போட்டாரா என்றால் இல்லை. எதிரியின் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரையும் தெரியுமென்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் நான் அவரின் அண்ணன் மட்டும் தான் தெரியுமென்று சாட்சியம் அளித்துள்ளேன். எதிரியின் கையொப்பம் எப்படியிருக்கும் என்பது எனக்கு தெரியாது. எதிரி என்ன படித்துள்ளார் என்று தெரியுமா என்று கேட்டால் தெரியாது. எதிரி எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்று கேட்டால் 5 வருடம். அதசாஆ 1 காசோலையில் உள்ள கையொப்பமும், அதிலுள்ள விவரங்களும் வெவ்வேறு கால கட்டத்தில் எழுதப்பட்டது என்று சொன்னால் அதைபற்றி தெரியாது. எதிரிக்கு நான் காசோலை தாக்கல் செய்த விவரத்தை கூறினேனா என்றால் எதிரி தான் அந்த தேதியில் தாக்கல் செய்யுமாறு கூறினார்.

நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

(SD/-)V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.